செய்தி வெளியீடு எண் : 1432 நாள் : 19.07.2023

**மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் இன்று கோடை காலத்தில் தக்காளி மற்றும் இதர காய்கறிகளில் திடீர் என ஏற்படும் விலை ஏற்றத்தினைத் தவிர்ப்பது குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

கோடை காலத்தில் தக்காளி மற்றும் இதர காய்கறிகளில் திடீர் என ஏற்படும் விலை ஏற்றத்தினைத் தவிர்ப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, மாண்புமிகு வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் இன்று (19.07.2023) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் / அரசு செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர்.எஸ்.நடராஜன், இ.ஆ.ப., மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மரு.ஆர்.பிருந்தாதேவி, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முக்கியமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தக்காளி விளைச்சல் குறைவினால் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக விலை ஏற்றம் அதிகமாகிறது என்பதால், இந்த விலை ஏற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு அறிவியல் பூர்வமாகவும், ஆராய்ச்சி மூலமாகவும் ஆண்டு முழுவதும் சீரான விளைச்சலை உருவாக்கிட எடுக்க வேண்டிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப உத்திகளை மேம்படுத்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கூடுதல் பரப்பில் தக்காளி சாகுபடி செய்திட, வேளாண் மண்டலங்கள், மண்வளம் மற்றும் காலநிலைக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள், இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்பது குறித்து அறிவுரை வழங்கினார். குறுகிய கால, கோடை கால இரகங்களை அறிமுகப்படுத்திட

அவசரகால முறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தினை அறிவுறுத்தினார்.

உற்பத்தியான விளைபொருட்களை முறையாக சேமித்து வைக்கவும், சேதமின்றி விற்பனை செய்யவும், தேவையான சேமிப்பு உத்திகளையும், குளிர்பதன சேமிப்பு கிடங்குகளையும் உருவாக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

வீட்டுத்தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளக்கி, தரமான நாற்றுகள், விதைகளை உரியகாலத்தில் நகர்ப்புர மக்களுக்கு விநியோகித்திட நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக்கொண்டார்.

மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிக வெப்ப நிலையைத் தாங்கி வளரக்கூடிய இரகங்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்குத் தெரியப்படுத்திட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து தோட்டக்கலைத்துறையும் இனிவரும் காலங்களில் பற்றாக்குறையைத் தவிர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in